# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2108/13 - 2019 ජනවාරි මස 28 වැනි සඳුදා - 2019.01.28

*2108/13 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது குறிப்பு இல.: 1782.*
*காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்*
*இல.: 4-3/7/2016/எச்டபிள்யூ/392.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில், வகபமல பல்லேசிய பத்துவ சிறு பிரிவு ( இ440 டீ) வெலமிடியாவ கிராம அலுவலர் பிரிவில் வெலமிடியாவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் மா 1745 மற்றும் 2018.09.14 ஆந் திகதியில் துண்டு இல. 1 – 3 (3 துண்டுகள்) விஸ்தீரணம் 0.1060 ஹெக்டயார் எனக் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் விபரங்கள்:

01. **துண்டு இல. 1**
காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமைகோருபவர்: தபுலு ரஜமஹா விகாரை; விஸ்தீரணம்: 0.0124 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**
காணியின் பெயர்: வெத்தியாய; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமைகோருபவர்: தபுலு ரஜமஹா விகாரை மற்றும் ஏக்கநாயக்க முதியன்சேலாகே ஞானதிலக என்பவரால் பயிரிடப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 0.0833 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 3**
காணியின் பெயர்: வெத்தியாய; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமைகோருபவர்: தபுலு ரஜமஹா விகாரை.

வெல்விதானயலாகே சிசிர என்பவரால் பயிரிடப்பட்டுள்ளது;
விஸ்தீரணம்: 0.0103 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு தம்புள்ள பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். பீ. பீ. ஏ. ஹேவாபதிரண,
பிரதேச செயலாளர்,
தம்புள்ள.

பிரதேச செயலகம்,
தம்புள்ள,
2019, சனவரி 23.

02-430

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*பிரதேச செயலாளர் குறிப்பு இல.:* WEG/LAN/L1/ACQ/04.

மேற் குறித்த தலைப்பின் கீழ் இலக்கம் 2068/30 மற்றும் 2018 ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானப் பத்திரத்தில் விளம்பரப்படுத்திய விளம்பரத்திற்கு கவனம் செலுத்துவதோடு. அறிவித்தல் விடுக்கப்பட்ட விளம்பரத்தில் நேர்முகப் பரீட்சைத் திகதி 2018, யூன் மாதம் 13 ஆகவும் எழுத்து மூல தகவல்கள் முன் வைக்கும் திகதி 2018, யூன் மாதம் 06 ஆந் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நேர்முகப் பரீட்சைத் திகதி 2019, ஏப்பிறல் 24 எனவும் எழுத்து மூல தகவல்கள் முன் வைக்கும் திகதி 2019, ஏப்பிறல் 17 எனவும் திருத்தப்படுகிறது.

கே.பீ.ஜீ. சுமித் சாந்த,
பிரதேச செயலாளர்,
வெலிகாமம்.

பிரதேச செயலகம்,
வெலிகாமம்,
2019, சனவரி 21.

02-431

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.